கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

அமர்வு வழக்கு எண்.54/2022

அ.சா. 7 (LW 7 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | மகுடீஸ்வரன் | **தொழில்** | |
| **தகப்பனார் பெயர்** | பழனிச்சாமி | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **13.07.2023** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1,2,3 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது சித்தையன்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். பெயிண்டர் வேலை செய்து வருகிறேன். அ.சா.6 ஐ எனக்கு தெரியும். நானும், பிரேம்குமாரும் 14.06.2021ம் தேதி கருப்பையா என்பவர் கொலை சம்பந்தமாக தகவல் கிடைக்கப்பட்டு, சம்பவ இடமான மாலைப்பட்டி ரோட்டிற்கு சென்று, சம்பவ இடத்தை பார்வையிட்டேன். அப்போது போலீசார் அங்கு இருந்தார்கள். அவர்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் தயார் செய்தார்கள். பார்வை மகஜர் தயார் செய்தார்கள். பார்வை மகஜரில் நானும், பிரேம்குமாரும் கையொப்பம் செய்தோம். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு ரத்தம் சிந்தியிருந்த தார் ரோட்டில் இருந்த மண்ணையும், ரத்தம் படாத மண்ணையும் போலீசார் கைப்பற்றினார்கள். TVS 50 XL Blue Colour இருசக்கர வாகனம் கிடந்ததையும் போலீசார் மகஜரில் கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சியில் நானும், பிரேம்குமாரும் கையொப்பம் செய்தோம். அந்த அத்தாட்சி ஏற்கனவே அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலீசார் கைப்பற்றிய இருசக்கர வாகனம் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள வாகனம் தான். அது சா.பொ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2023.07.13 16:24:49 +0530

Additional District Judge,

Dindigul.